# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.

(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590


**ஆணை நாள் – 02.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.13661/F/2024**

திரு S.R. சையத் அலி பாஷா -- மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
சேலம் - 636 001. -- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 01.09.2023 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 13.09.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 18.10.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 26.08.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (02.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் திரு S.R. சையத் அலி பாஷா என்பவர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு ஆ. சந்திரசேகரன், கண்காணிப்பாளர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சேலம் மாவட்ட ஆட்சியரக அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், வக்ஃப் சட்டம், 1995, சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், ஜாக்கிர் அம்மாபாளையம் மற்றும் செட்டிச்சாவடி (G.S.236, 237, 247 & 248) வக்ஃப் மற்றும் அதன் குக்கிராமங்கள் (சூரங்களம், ரெட்டிபட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, காமிநாயக்கன்பட்டி, குரும்பம்பட்டி, தாத்தங்கார்பேட்டி) மேற்கண்ட வக்ஃப் கிராமங்களின் Old Inam Register (B-Register), Settlement Land Register (SIR), Settlement Fair Adangal, Settlement Fair Land Register (FIR), Field Measurement Book (FMB), Rough Village Map (RVM), Old 10(1) Register, 1 (B) Register, Year Adanagal ஆகியவற்றின் நகல்கள், மேற்கண்ட வக்ஃப்பின் தமிழ்நாடு இனாம் ஒழிப்பு சட்டம் 26/2003 சேலம் மாவட்டம் மற்றும் வட்டம் ஜாகிர் அம்மாபாளையம் கிராமங்களின் இனாம் உடமை பிரிவு 32(2)-ன் செயல் குறிப்பின் நகல் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 10 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (02.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனுவில் சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், ஜாக்கிர் அம்மாபாளையம் மற்றும் செட்டிச்சாவடி (G.S.236, 237, 247 & 248) வக்ஃப் மற்றும் அதன் குக்கிராமங்கள் (சூரங்களம், ரெட்டிபட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, காமிநாயக்கன்பட்டி, குரும்பம்பட்டி, தாத்தங்கார்பேட்டி) மேற்கண்ட வக்ஃப் கிராமங்களின் Old Inam Register (B-Register), Settlement Land Register (SIR), Settlement Fair Adangal, Settlement Fair Land Register (FIR), Field Measurement Book (FMB), Rough Village Map (RVM), Old 10(1) Register, 1 (B) Register, Year Adanagal ஆகியவற்றின் நகல்கள், மேற்கண்ட வக்ஃப்பின் தமிழ்நாடு இனாம் ஒழிப்பு சட்டம் 26/2003 சேலம் மாவட்டம் மற்றும் வட்டம் ஜாகிர் அம்மாபாளையம் கிராமங்களின் இனாம் உடமை பிரிவு 32(2)-ன் செயல் குறிப்பின் நகல் உள்ளிட்ட விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியதாகவும், மனுதாரர் கோரும் தகவல்களானது தங்களது அலுவலகத்தில் இல்லையென்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(3)-ன்கீழ் மனுதாரரின் மனு சேலம், வக்ஃப் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு ந.க.5819/2023/பிசி5 நாள் 19.03.2024 தேதியிட்டு மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-

- மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்கள் குறித்து சேலம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் இல்லையென்பதால், ந.க.5819/2023/பிசி5 நாள் 19.03.2024 தேதியிட்டு சேலம், வக்ஃப் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(3)-ன்கீழ் மனுதாரரின் மனு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், நாளதுவரையிலும் சேலம், வக்ஃப் அலுவலகத்தின் வாயிலாக முழுமையான தகவல்கள் ஏதும் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை என்பதும் தெளிவாகிறது. எனவே, மனுதாரரின் மனுவில்

கோரும் தகவல்கள் தங்கள் அலுவலகத்தில் இல்லாதபட்சத்தில் சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(3)-ன்கீழ் மனுதாரரின் மனுவினை மாற்றம் செய்ய சேலம், வக்ஃப் கண்காணிப்பாளர் அவர்கள் தவறியுள்ளார். ஆகையால், மனுதாரரின் மனுவில் கோரும் தகவல்களை சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெற்று மனுதாரருக்கு முழுமையாக **'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது'** என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு சேலம், வக்ஃப் கண்காணிப்பாளர் / பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.13661/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
சேலம் - 636 001.

**<u>உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு :-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
வக்ஃப் ஆய்வாளர் அலுவலகம்,
திப்பு சுல்தான் மார்க்கெட்,
எண்.1, ஸ்டாம்ப அக்ரஹாரம்,
சேலம் - 636 001.

**<u>வழக்கு எண்.SA.13661/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு S.R. சையத் அலி பாஷா,
த/பெ. E.S. சையத் ரவூத்ப்பாஷா,
எண்.30, மேலபக்கத்துறை, ஆயங்குடி அஞ்சல்,
காட்டுமன்னார்கோயில் தாலுக்கா,
கடலூர் மாவட்டம்.

Copy to: File
SNPS / 04.04.2025